[1990 ஏப்ரல் 9

பேரணைக் குடிநீர்த் திட்டம்.

*3204 திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

திண்டுக்கல் நகர பேரணைக் குடிநீர்த் திட்டம் ஒப்பந்தக் காரர்களின் சுணக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் ஒப்பந் தத்தை ரத்து செய்து அரசே திட்டத்தை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேவை இல்லை. குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயலாக் கப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

9-55 மணி

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராண்டிற்கு முன்னால் கேட்கப்பட்ட கேள்வி இது. ** இன்றைக்கு திடீர் திடீரென்று மெயின் குழாய்கள் வெடித்துக் கொண்டிருப்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவில் குற்றச் சாட்டுக் கூடாது. அந்தக் குற்றச்சாட்டு உள்ள வரி மட்டும் நீக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து சென்ற வாரம் நடைபெற்ற குடிநீர் வடிகால் வாரிய கூட்டத்தில் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினைகளை எழுப்பி இருக்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரு கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேறியதற்குப் பிறகுகூட ஒருநாள் விட்டு ஒருநாள் ஒரு மணி நேரம் குடிநீர் கிடைக்கின்றது. இதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1990 ஏப்ரல் 9]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்துக் களை அதிகாரிகளோடு அவரே கலந்து பேசி, அங்கே பணியாற்று கின்ற களப்பணியாளர்களே, அவருக்கு பதிலை கொடுத்து இருக் கிறார்கள். இருந்தும், இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். இதுகுறித்து அரசு நிச்சயமாக ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம்.

*9025—டாக்டர் க. காஞ்சனா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணகிரி மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(அ) மற்றும் (ஆ) : கிருஷ்ணகிரி மருத்துவமனையில் ஏற்கெனவே இரத்த சேமிப்பு நிலையம் இயங்குவதால், இக் கேள்விக்கிடமில்லை.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சரியான தகவல் தரப்படவில்லையோ என்று நான் அச்சப்படுகிறேன். கிருஷ்ணகிரி மருத்துவமனையில் பிளட் பேங்க் இல்லை. பிளீடிங் (Bl eding) ரூம், ரெஸ்ட் ரூம், ஸ்டோர் ரூம் என்று சொல்லக்கூடிய எதுவுமே இல்லை. ரத்தத்தை இனம் பிரித்துப் பார்க்கின்ற 'குரூப் சீரா' கிடையாது. தர்மபுரி தலைமை மருத்துவமனையிலே (Double R.H. Typing) கூட கிடையாது. தலைவர் அவர்களே, சுழன்றோடிக்கொண்டிருக்கிற ரத்தத்தின் கணிசமான பகுதி சிதறி தரையிலே விழுந்து சூடற்றுப் போகுமானால் மனிதன் செத்துப்போவது என்பது நிதர்சனமான உண்மை. கிருஷ்ணகிரி, என். எச். 46, என். எச். 7 என்று இரண்டு தேசிய பெருவழித் தடங்கள் இணைகின்ற ஒரு பெரிய நகரம் அது. அன்றாடம் விபத்துக்கள் நடக்கின்றன. அன்றாடம் சாவுகள் நடக்கின்றன. பிளட் பேங்க் என்பது எங்களுடைய கிருஷ்ணகிரி மருத்துவமனைக்கு மிக மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனே முழு